[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1986 நவம்பர் 25

அறிக்கை.

சென்னை—44, குரோம்பேட்டையிலுள்ள இந்திரா காட்டன் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆலை தொழிலாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு ஊதியம், போனஸ், பிழைப்பூதியம் ஆகியவை வழங்கவில்லை என்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது இந்திரா பஞ்சாலை அண்ணா பணியாளர் சங்கம் தெரிவித்தது.

எனவே, தொழிலாளர் ஆணையரின் 11–11–86 மற்றும் 12–11–86 நாளைய கடிதங்கள் மூலம் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய மேற்குறிப்பிட்ட தொகைகளை வழங்குமாறு நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சட்டப்படி சேரவேண்டிய ஈட்டிய விடுப்பு சம்பளம், பிழைப்பு ஊதியம் ஆகிய தொகைகளை நிர்வாகம் வழங்கவில்லை எனில் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் முன்பு மனு செய்து நிவாரணம் காணலாம், போனஸ் தொகை பற்றி முறையான தொழிற்தகராறு எழுப்பி நிவாரணம் காண வழி உள்ளது.

இந்திராகாட்டன் மில்ஸ் நிறுவனத்தில் 23–9–86 அன்று இணை ஆணையர் (சமரசம்) முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் குறித்து தொழிலாளர் தனித்துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தை நிலுவையில் உள்ளது தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமாக கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுப்பதற்கும் வேலை மறுக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் தனித்துணை ஆணையர் நிர்வாகத்திற்கு ஏற்கனவே ஆலோசனை கூறியுள்ளார். இதன் அடிப்படையில் 24–11–86 அன்று நிர்வாகத்தினருடன் நடைபெற உள்ள பேச்சுவார்த்தையில் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படுத்தி சகஜநிலை ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

தொழிலாளர்களின் உள்ளிருப்பு போராட்டம் பற்றி தகவல் ஏதும் தொழிலாளர் துறைக்கு தெரிவிக்கப்படவில்லை.

இந்த ஆலையின் பிரச்சனை தொழிலாளர் துறையால் கவனிக்கப்பட்டு வருகிறது.

(ஆஆ) மந்தைவெளி, பட்டினப்பாக்கம் பகுதிகளில் திறந்தவெளி சாக்கடை அமைப்பதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பா. வளர்மதி ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

1986 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

மந்தைவெளி பேருந்து நிலையத்திலிருந்து பட்டினப்பாக்கம் செல்லும் வழியிலுள்ள இராமகிருஷ்ணா மடம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் தெற்கு ஓடைக்கரைச் சாலையில், தண்ணீர் தேங்குவதற்குக் காரணம் ஓசியானிக் குப்பைத் திடலில் உள்ள பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான நிலத்தின் வழியாக தண்ணீர் வடிந்து செல்வதற்கு வசதியாக வாய்க்கால் வெட்டப் படாமல் இருப்பதாகும். இதற்காகச் சென்னை மாநகராட்சி சென்ற ஒரு வருட காலமாகப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் அனுமதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. சென்னை மாநகராட்சி ரூ. 1.30 இலட்சம் செலவில் தெற்கு ஓடைக் கரைச் சாலையில் மழைநீர் வடிகால்களை ஏற்கனவே வெட்டி யுள்ளது. இது போக 4 அடி அகலமும், 4 அடி உயரமும் உடைய நான்கு தரை பாலங்கள் இந்த சாலையில் குறுக்காக ரூ 1.15 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இந்த சிறு பாலங்கள், ஓசியானிக் குப்பைத் திடலில், சாலையின் இரு மருங்கிலும் உள்ள மழைநீர் வடிகால்களை இணைக்கின்றன. பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான இடத்திற்கப்பால் அடையாறு உப்பங்கழியுடன் சென்று சேரும் இயற்கையான உப்பங்கழி வாய்க்கால் ஒன்று உள்ளது. சாலையின் ஓரத்தில் உள்ள மழைநீர் வடிகால்களை இந்த உப்பங்கழி வாய்க்காலுடன் சேர்ப்பதற்கு இடையிலுள்ள பல்லவன் போக்குவரத்துக்குச் சொந்தமான பூமியில், மழைநீர் வடிகால்களை சென்னை மாநகராட்சி அமைப்பதற்கு அக்கழகம் 19-11-86 அன்று கூட்டாய்விற்குப் பின்பு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, தண்ணீர் எளிதில் வடிந்து செல்வதற்கு ஏற்ற வகையில், சாலை யின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்களிலிருந்து அடையாறு உப்பங்கழிவரை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பூமியில். சென்னை மாநகராட்சி வடிகால்களை விரைவில் அமைக்கும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(இஇ) கோவை மாவட்டத்தில் சில எஞ்சினியரிங் மற்றும் பனியன் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. சுப்ப ராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.